# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2450/40- 2025 අගෝස්තු මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.08.21

2450/40 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட GL 24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2025, பெப்புருவரி 20 ஆந் திகதிய 2424/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "செயற்கை நுண்ணறிவில் விஞ்ஞான முதுமாணி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-


103 - PG 7230 - 284 (2025/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, பின்வருவன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது:-

1. குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் தளவாடங்கள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு, முகாமைத்துவ தகவல் முறைமைகளில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு, வணிக முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு மற்றும் தர முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;

    (அ) இலங்கை பீரட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் தரவு விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு மற்றும் மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்:-

    (அ) இலங்கை பீரட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தர) பீரட்சையில் பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பொறியியல் தொழினுட்பவியல் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அம்ாவில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அல்லது

    (ஆ) இலங்கை பீரட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தர) பீரட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கை பீரட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரணதரத்தில்) கணித பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றுடனான வெற்றிகரமான பூரணப்படுத்துகை; அல்லது

    (இ) இலங்கை பீரட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஏதேனும் தடவையில் ஒரே மற்றும் அதே அமர்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சாதாரண சித்தியுடன் (S) மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கைப் பீரட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணித பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

3. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| தளபாடங்கள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு | பீபீஏ சிறப்பு (தளபாடங்கள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்) |

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு | பீபீஏ சிறப்பு (சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்) |
| முகாமைத்துவ தகவல் முறைமைகளில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு | பீபீஏ சிறப்பு (தகவல் முறைமைகள் முகாமைத்துவம்) |
| வணிக முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு | பீபீஏ சிறப்பு (வணிக முகாமைத்துவம்) |
| தர முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக இளமாணி சிறப்பு | பீபீஏ சிறப்பு (தர முகாமைத்துவம்) |
| தரவு விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு (தரவு முகாமைத்துவம்) |
| மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு (மென்பொருள் பொறியியல்) |

**கலாநிதி ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, ஓகத்து 14.

EOG 08 - 232

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது